(Chapter XXIII Code of Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

| | | |
|---|---|---|
| Calender | .. .. | Case No. CC. 110 of 2022 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |

| | |
|---|---|
| | Prosecution/Complainant side **P.W.1** |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : ராஜ்குமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02nd day of January 2023.

02.01.2023

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது ஊர்க்காரர். ஆஜர்

எதிரி குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் ஏற்கெனவே முன்விரோதம் இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 11.10.2020 ம் தேதி இரவு 08.15 மணியளவில் காக்கூர் ஆர்ச் அருகே நான் வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி கத்திக்கம்பை வைத்து என்னை வயிற்றில் இடது பக்கத்தில் குத்திவிட்டார்.

**2)** பின்பு முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கு சிகிச்சை எடுத்துவிட்டு முதுகுளத்தூர் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

**1)** நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நேரத்தில் சுமார் 4 நபர்கள் இருந்தார்கள். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமும் நேரமும் இருட்டான பகுதி என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே தான் அரசு டாஸ்மாக் கடை உள்ளது என்றால் சரிதான்.

**2)** இருட்டான பகுதி என்பதால் யார் யார் நின்றுகொண்டிருந்தார்கள் என்று குறிப்பிட்டு கூறமுடியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்து முடிந்தவுடனே மருத்துவமனைக்கு கிளம்பிவிட்டேன். நான் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் சேரும்போது 09.00 மணி இருக்கும். முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன்.

**3)** நான் புகார் கொடுத்தபின்பு போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் விசாரித்தார்கள். யார்

என்னை எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்று கேட்டார்களா என்றால் கத்திக்கம்பால் எதிரி தாக்கியதாக கூறினேன். எனக்கு இடதுபுற வயிற்று பகுதியில் காயம் ஏற்பட்டது. வேறு காயங்கள் இருந்ததா என்றால் என் நெஞ்சில் வலதுபுறம் காயம் இருந்தது.

**4)** சம்பவம் நடந்த அன்று இரவு 10.00 மணியளவில் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்னநேரத்தில் சொன்ன இடத்தில் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**5)** எதிரிக்கும் எனக்கும் உள்ள குடும்ப பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு நான் இருசக்கர வாகனத்தில் செல்கின்றபோது தானாக தவறிவிழுந்ததில் ஏற்பட்ட காயத்தை வைத்துக்கொண்டு எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.